சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 07.04.2026
வா.சா.2 – இந்திரா W/o.மகேந்திரன்
COS No.1/2024
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

நான் BSC Physics படித்துள்ளேன். நான் தொழிலாளர் நலத்துறையில் தினக்கூலியாக Computer Operator ஆக பணியாற்றி வருகிறேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 3 லட்சம் ரூபாயை கடனாக கொடுக்கப்படாமல் முதலீடாக கொடுத்தால் 24% பங்கு ஆதாயமாக வழங்குவதாக பிரதிவாதி என் கணவரிடம் கேட்டிருந்ததாக குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை எனது கணவர் வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, வா.சா.ஆ.1 மற்றும் 4ல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், ஆகையால் அதை நான் பொய்யாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் நான் தான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி வா.சா.ஆ.1 முதலீடு ஒப்பந்த பத்திரத்தில் என் கணவரிடம் பிரதிவாதி சந்திரமோகன் கடனாக 3 லட்சம் பெற்று கொண்டதாக வாசகம் இடம்பெறவில்லை என்றால் பெற்று கொள்வதாக ஒப்புகொண்டதாக காணப்பட்டுள்ளது. நான் தவறாக சொல்கிறேன் என்றும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் "பெற்றுகொள்வதாக ஒத்துக்கொண்டு" என்று வாசகம் இடம்பெற்றுள்ளது என்றால் சரிதான். என் கணவர் 3 லட்சம் ரூபாயை பிரதிவாதிக்கு கொடுத்தற்கு ஆதாரமாக ரசீது எதுவும் பெற்றுகொண்டாரா என்றால் இல்லை அதற்கு ஆதரவாக காசோலையை பிரதிவாதி கொடுத்துள்ளார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் காசோலை கொடுக்கப்பட்ட விபரம் பற்றி குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் சகோதரி

அகிலாவிற்கும் இந்த வழக்கின் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்டுள்ள பணம் வரவு செலவு தொடர்பான நடவடிக்கைக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரிதான். ஆகவே இந்த வழக்கில் நான் பொய்சாட்சியம் உரைக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி தாமாக முன்வந்து, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ரசீதுகளுக்கும், ஓம் முருகா அசோசியேட்ஸ் தொடர்பான நிறுவனத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நானும், பிரதிவாதியின் மனைவி அருண்மொழியும் சேர்ந்து இருசக்கர வாகனத்திற்கான நிதியுதவி செய்யும் தொழில் செய்து வந்ததாக கூறுவது தவறு என்றும் பிரதிவாதியும் என் கணவரும் தான் கூட்டாக சேர்ந்து வாகனத்திற்கு நிதியுதவி செய்யும் தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உரிய மறுபயன் இல்லாமலும், வா.சா.ஆ.2 காலவதியான காசோலையை வைத்தும் என்னுடைய தூண்டுதலின் பேரில் வாதி பொய்யான வழக்கை இந்த பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.04.07 19:59:52 +0530

Sub Judge
Melur